## லேவிய ஆசாரியத்துவ முறைமையின் நோக்கம்
## PURPOSE OF THE LEVITICAL PRIESTHOOD

### அறிமுகம்

சரித்திரத்தில் தேவனுடைய அடுத்தப் பிரதான நடவடிக்கை எதுவென்றால், லேவிய ஆசாரியத்துவ முறைமையை கொடுப்பதற்கு ஏதுவாக மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமையை விலக்கியது தான். "மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே" நாமம் தரிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து நியமிக்கப்படுகிற வரைக்கும் இருக்கவேண்டிய தற்காலிக ஆசாரிய முறைமையாகவே இது செயல்பட்டுவந்தது. *எபிரெயர் 5:10.* யாக்கோபின் சந்ததியார் எகிப்தில் அடிமையாயிருந்த காலத்தில், அவர்களில் அநேகர், தேவன் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும் பண்ணியிருந்த உடன்படிக்கைகளின் மீது விசுவாசத்தை இழந்து இருந்தார்கள். இஸ்ரவேலருடைய பாவங்களைக் குறித்து அவர்களுடைய மனச்சாட்சியை உணர்த்துவது லேவிய ஆசாரியத்துவ முறைமையில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தின் நோக்கங்களில் ஒன்றாயிருந்தது. *ரோ. 3:19,20.*

இஸ்ரவேலரை தேவனுடைய பிள்ளைகளாக உருவாக்குவதற்காக லேவிய ஆசாரியத்துவ முறைமை கொடுக்கப்படவில்லை. *கலா. 3:19-22.* மக்களுடைய தவறுகளை குற்றங்களாகத் தீர்த்து அவர்களை அவமானப்படுத்தக்கூடிய பிரமாணம், அவர்களை பிள்ளைகளாக உருவாக்க முடியாது. *ரோமர் 3:19,20; 5:13,14.* தேவனுக்கு இது தெரியும், பெற்றோரும் இதை தெரிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய சித்தமும், நோக்கமும் நிறைவேறும் வகையில் தங்கள் பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோரே, வெற்றிகரமான பெற்றோர். "அந்த ஆசாரிய முறைமையினாலே பூரணப்படுதல் உண்டாயிருக்குமானால், (ஏனெனில் இந்த முறைமையின் அடிப்படையிலேயே இஸ்ரவேலர் நியாயப்பிரமாணத்தை பெற்றுக்கொண்டார்கள்) ஆரோனுடைய முறைமையின்படி அழைக்கப்படாமல், மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படி





அழைக்கப்பட்ட வேறொரு ஆசாரியர் எழும்பவேண்டுவதென்ன?" *எபிரெயர் 7:11.* தேவனுடைய சேஷ்ட புத்திரனாகிய இஸ்ரவேலை ஆளுகை செய்யக்கூடிய அந்தஸ்து லேவிய ஆசாரியத்துவ முறைமைக்குக் கொடுக்கப்பட்டது; தேவன் மெல்கிசேதேக்கின் முறைமைக்கு ஒப்பான ஒரு முறைமையை ஏற்படுத்துவதற்கு ஏற்ற காலம் வரும்வரை இந்த நிலை நீடித்தது. *யாத். 4:22; கலாத்தியர் 4:2.* "வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம்." *எபிரெயர் 4:14.*

"ஜீவ விருட்சத்திற்கு" போகும் உரிமையை மனுக்குலத்திடமிருந்து பறித்ததே தேவனுடைய முதல் பிரதான நடவடிக்கையாய் அமைந்தது; இதன் விளைவாக ஆவிக்குரிய மரணமும், சரீர மரணமும் மனுக்குலத்திற்கு ஏற்பட்டன. *1 கொரி. 15:22.* சரீர மரணத்தை ஏற்படுத்தும்படியாகவே இந்த நடவடிக்கையை அவர் மேற்கொண்டார். ஏனெனில். நன்மை, தீமை பற்றிய அறிவோடு பூமிக்குரிய சரீரத்தில் என்றென்றைக்கும் வாழ்ந்து, பிரயோஜனமில்லாமல் மனுக்குலம் போராடுவதை தேவன் விரும்பவில்லை. *ஆதி. 3:22.* "சூரியனுக்குக் கீழே" வாழும் மக்களுக்கு எழுபது அல்லது எண்பது ஆண்டுகளுக்குப் பிறகு சரீர மரணம் நேரிடுவதும் ஒரு ஆசீர்வாதமாகும். *சங்கீதம் 90:10.* மக்கள் திருமணம் செய்து கொண்டு குழந்தைகளை பெற்றுக்கொள்வதற்கும், போஷித்து காப்பாற்றுவதற்கும், ஆரோக்கியமான குடும்ப சூழ்நிலை உருவாவதற்கும், தேவனுக்கு உகந்த பிள்ளைகளாக வாழ்வதற்கும் இந்த கால அளவு போதுமானதென்று தேவன் நினைக்கின்றார். தேவனுடைய படைப்பைப் பற்றிய அவருடைய நோக்கத்தை மனுக்குலத்துக்கு நியமிக்கப்பட்ட சரீர மரணம் பாதிக்கவில்லை. உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு தமது பிள்ளைகளின் ஆவிகளை புதிய சரீரங்களில் குடியேற்றவேண்டும் என்பதே தேவனுடைய நித்திய திட்டம். *1 கொரி. 15:50; பிலிப்பியர் 3:20,21.* புதிய பரலோக சரீரங்களை நாம் தரித்துக்கொண்ட பிற்பாடு, பரலோகத்தில்

தேவனுடைய ஆவிக்குரிய நகரத்தில் உள்ள "ஜீவ விருட்சத்திடம்" போகும்படி நமக்கு அனுமதி கிடைக்கும். *ரோமர் 8:18-25; வெளி. 22:12-16.*

சாத்தானுடைய குணாதிசயங்கள் நிறைந்த உலகத்திடமிருந்து நோவா முதலான எட்டுப் பேரின் ஆவிக்குரிய / மன நிலையை பாதுகாப்பதற்காக தேவன் இரண்டாவது பிரதான நடவடிக்கையை மேற்கொண்டார். *ஆதி. 6:8; எபி. 11:7.* நோவாவின் காலத்தில் வாழ்ந்த தலைவர்களும் மீதமிருந்த மக்களுடைய பெற்றோர்களும் தேவனுடைய வழிநடத்துதலும், ஐக்கியமும் இல்லாமல் "வாழ்க்கைப் பெட்டிகள்" என்ற சிறைகளில் அடைக்கப்பட்டவர்களாகவே வாழ்ந்துவந்தார்கள். *ஆதி.6:1-7.* மனுக்குலத்தை தேவன் படைத்ததற்கான முன் குறிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற விடாமல் இடையூறு ஏற்படுத்துகிறவர்களாகவே சாத்தானுடைய மக்கள் இருந்தார்கள். இந்தப் பூமியில் தேவன் மீது விசுவாசம் கொண்டிருந்த கடைசி குடும்பமாகிய நோவாவின் குடும்பத்தையே முழுவதுமாக அழித்து விடும் அளவிற்கு அவர்கள் செல்வாக்கு மிகுந்தவர்களாய் இருந்தார்கள்.

ஒரு தேசத்தை மற்ற தேசங்களை விட மேன்மையுள்ளதாக ஆக்குவதாக தேவனுடைய மூன்றாவது பிரதான நடவடிக்கை அமைந்தது. *ஆதியாகமம் 12:1-3.* இதுவே, ஒன்று இஸ்ரவேல் தேசமாகவும், மற்றவை புறஜாதிகளின் தேசங்களாகவும் உருவாவதற்குக் காரணமாய் இருந்தது. *எபேசியர் 2:11-13.* ஆபிரகாம், சாராளுடைய சந்ததியார் இஸ்ரவேலர் என்றழைக்கப்பட்டார்கள். இஸ்ரவேல் பாபிலோனிய சிறையிருப்புக்குள் அடைபட்ட காலத்தில் இவர்கள் "யூதர்கள்" என்று அழைக்கப்பட்டார்கள். *2 இராஜாக்கள் 16:6*இல் நாம் பார்க்கும் யூதர் என்ற வார்த்தை "யெஹ்ஹூடீ" (Yehhoodee) என்ற எபிரெய வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மேலும் *எரேமியா 34:8* மற்றும் *எஸ்தர் 2:5* பார்க்கவும். மற்ற தேசங்களை சேர்ந்தவர்கள் புறஜாதியார் என்று அழைக்கப்பட்டார்கள். *ஏசாயா 42:7.* எல்லா தேசங்களுமே நோவாவின் பிள்ளைகளிடமிருந்து உருவானவைகள் தான்.





இந்த மூன்றாவது நடவடிக்கையின் மூலமாக, தேவன் இஸ்ரவேல் தேசத்துக்கு உடன்படிக்கைகளை வழங்கினார். தேவன் மனிதர்களுக்குள் உண்டாக்கியிருந்த எல்லா தேவைகளையும் நிறைவு செய்வதற்கேற்ப இந்த உடன்படிக்கைகள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் மாம்சத்துக்குரிய ஆசீர்வாதங்களையும் அந்த தேசத்து மக்கள் அனுபவிப்பதற்கு உதவிகரமாக இருந்தன. அவரது உடன்படிக்கைகள் மீது இஸ்ரவேலருக்கு இருந்த விசுவாசமே அவர்களுக்கு நீதியாக எண்ணப்பட்டது. *ஆதி. 15:6.* விசுவாசத்தால் நீதிமானாக்கும் உபதேசம், அவர்கள் தேவனுடன் சமாதானமான உறவை ஏற்படுத்திக்கொள்ள வழிவகுத்தது. இந்த சமாதானம் நிறைந்த ஐக்கியத்தினால் பரிசுத்தமான குணங்களை அவர்கள் வளர்த்துக்கொள்ள முடிந்தது. *உபாகமம் 7:6-9.* மாம்சத்துக்குரிய இஸ்ரவேலர் மூலமாக தேவனைக் கண்டுகொள்ள வாய்ப்பிருந்ததால், புறஜாதியார் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கவேண்டும்; அப்படியிருப்பினும் அக்காலத்தில் காரியம் தலைகீழாய் நடந்தது. *ஆதியாகமம் 18:17; ரோமர் 2:24.*

தேவன் தமது நான்காவது பிரதான நடவடிக்கையை சீனாய் மலையின் மீது மேற்கொண்டார். ஏற்கனவே நாம் பார்த்த நடவடிக்கைகளிலிருந்து இந்த நடவடிக்கை, நோக்கத்தில் மாறுபட்டு இருந்தது. முந்தைய நடவடிக்கைகள் உடன்படிக்கையை கைக்கொள்பவர்களை பிரித்தெடுப்பவையாக இருந்தன. அறியாமல் உடன்படிக்கையை மீறுகின்ற பாவத்திலிருந்து இஸ்ரவேலர்களை மீட்பதற்காக மோசேயின் நியாயப்பிரமாணத்தை உள்ளடக்கிய லேவிய ஆசாரியத்துவ முறைமையை தேவன் ஏற்படுத்தினார். இஸ்ரவேலர் எகிப்திலிருந்த காலத்தில் அவர்களது குடும்ப வாழ்க்கையின் சுற்றுச் சூழல் மிகவும் மோசமாக மாறியிருந்தது. தேவனுடைய உடன்படிக்கைகள் மீது விசுவாசம் உள்ள மக்கள் பூமியின் மீது "ஆபத்துக்குள்ளான இனத்தைப்" போல மிகவும் குறைந்து போனார்கள். ஆசாரியத்துவம் மாற்றமடைந்ததால், இயேசு கிறிஸ்து வரும் வரையிலும் "காரியக்காரருக்கும் வீட்டு விசாரணைக்காரருக்கும்" கீழ்ப்பட்டவர்களாக இஸ்ரவேலர் இருந்தார்கள். *கலாத்தியர் 4:2-5.*

தேவனுடைய ராஜ்யத்தில் இஸ்ரவேலர்களை பிள்ளைகள் ஆக்குகின்ற அவருடைய நித்திய நோக்கத்துக்கும் இஸ்ரவேலுக்கும் லேவிய ஆசாரியத்துவ முறைமை எப்படி பயனுள்ளதாக இருந்தது என்பதை புரிய வைப்பதே இப்பாடத்தின் நோக்கம்.

**பாடம்**

மோசேயினால் எகிப்திலிருந்து வெளியே அழைத்துவரப்பட்ட இஸ்ரவேலரில் அநேகர் யாக்கோபின் 12 குமாரருடைய சந்ததிகளாய் இருந்தார்கள். "கழுகுகளுடைய செட்டைகளின் மேல்" சுமந்து செல்வது போல தேவன் மோசேயைக் கொண்டு அவர்களை வழி நடத்தினார். *எண்ணாகமம் 26:2; யாத்திராகமம் 12:37,38; 19:4.* கிறிஸ்துவுக்கு முன்னோடியாக யோவான்ஸ்நானன் அனுப்பப்படுவதற்கு ஏறக்குறைய 1500 ஆண்டுகளுக்கு முன்பாக இந்தப் பிரதான நடவடிக்கையை தேவன் மேற்கொண்டார். யாக்கோபின் சந்ததியார் மூலமாக ஆபிரகாமின் சந்ததியுடன் உறவை நிலைநிறுத்துவதற்காக மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமையை மாற்றி லேவிய ஆசாரியத்துவ முறைமையை ஏற்படுத்தினார். இந்த மாற்றத்தை செய்வதற்காக தேவன் எப்பொழுது முடிவெடுத்தார் என்று நமக்குத் துல்லியமான நேரம் சொல்லப்படவில்லை. லேவி எகிப்தில் தங்கியிருந்த காலத்தில் ஆசாரியனாக ஊழியம் செய்யும்படி அவன் பிதாவாகிய யாக்கோபு அவனை ஆசீர்வதிக்கவில்லை. *ஆதி. 49:5,6.* அப்படியிருந்தும், இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து விடுதலைபண்ணி வழிநடத்தும்படி லேவியின் சந்ததியிலிருந்து மோசேயையும் ஆரோனையும் தேவன் தெரிந்துகொண்டார். *யாத்திராகமம் 6:16-27.* மக்கள் ஆரோனுக்கு நெருக்கடி கொடுத்து பொன் கன்றுக்குட்டியை உண்டாக்கி கலகம் செய்த நேரத்தில் லேவியர் அவர்களிலிருந்து தங்களை வேறுபடுத்திக்கொண்டு மோசேயோடு கூட நின்றார்கள். *யாத்திராகமம் 32:25-29.*

ஆசாரிய ஊழியத்தில் ஈடுபடும் கோத்திரமாக லேவி கோத்திரத்தை தேவன் தெரிந்துகொண்டார். அதில் ஆரோனும் அவன் குடும்பத்தாரும்





பிரதான ஆசாரியர்களாகவும், ஆசாரியர்களாகவும் பணியாற்றும்படி தெரிந்துகொள்ளப்பட்டார்கள். ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்குப் பிறகு ஆரோனின் குடும்ப வரிசையை சேர்ந்தவனாக ஏலி பிரதான ஆசாரியனாக ஊழியம் செய்துகொண்டிருந்தான். ஏலி தன்னுடைய பிள்ளைகளை கட்டுப்படுத்தி தேவனுடைய வழியில் நடத்தவில்லை. அதனால் ஏலியின் கடைசி குடும்பத்தை சேர்ந்தவனாயிருந்த "அபியத்தாரைக் கர்த்தருடைய ஆசாரியனாயிராதபடிக்குச்" சாலொமோன் விலக்கினான். *1 சாமு. 2:30-35; 1 இராஜா. 2:27* பார்க்கவும். பிரதான ஆசாரியர்களாய் பணியாற்றும்படி சாதோக்கையும் அவன் குடும்பத்தாரையும் தேவன் புதிதாகத் தெரிந்துகொண்டார். *1 இராஜாக்கள் 1:43,44.*

*தேவனுடைய மனுஷன் ஒருவன் ஏலியினிடத்தில் வந்து: கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், உன் பிதாவின் வீட்டார் எகிப்திலே பார்வோனின் வீட்டில் இருக்கையில், நான் என்னை அவர்களுக்கு வெளிப்படுத்தி, என் பலிபீடத்தின்மேல் பலியிடவும், தூபங்காட்டவும், என் சமுகத்தில் ஏபோத்தைத் தரிக்கவும், இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் அவனை எனக்கு ஆசாரியனாகத் தெரிந்துகொண்டு, உன் பிதாவின் வீட்டாருக்கு இஸ்ரவேல் புத்திரருடைய தகனபலிகளையெல்லாம் கொடுக்கவில்லையா? 1 சாமுவேல் 2:27,28.*

இஸ்ரவேலர் சீனாய் வனாந்தரத்தில் சேர்ந்த பிற்பாடு சீனாய் மலையின் மீது லேவிய ஆசாரியத்துவத்தோடு சம்பந்தம் உடைய விதிகளையும், கற்பனைகளையும், நியமங்களையும் பிரமாணங்களையும் தேவன் மோசேயிடம் கொடுத்தார். *யாத்திராகமம் 19:1,2,10,11.* "**உடன்படிக்கையின் புஸ்தகத்தை** எடுத்து, ஜனங்களின் காது கேட்க வாசித்தான்; அவர்கள் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து, கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள்." *யாத். 24:7.* இதன் பிற்பாடு, "அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி : நீ மலையின்மேல் என்னிடத்திற்கு ஏறிவந்து, அங்கே இரு; நான் உனக்குக் கற்பலகைகளையும், நீ அவர்களுக்கு உபதேசிப்பதற்கு, நான் எழுதின நியாயப்பிரமாணத்தையும்

கற்பனைகளையும் கொடுப்பேன் என்றார்." *யாத். 24:12.* இந்த பத்துக் கற்பனைகளும், மக்கள் தேவனோடும் அயலகத்தாரோடும் ஐக்கியம் கொள்வதற்கு உபதேசிப்பவைகளாய் அமைந்திருந்தன. *யாத். 20:1-17.* மோசேயின் நியாயப்பிரமாணம் வெளிப்படையான செயல்களைக் குறிப்பிடுவதாக அமைந்திருந்தது. ஆனால், ஜீவப் பிரமாணமோ உள்ளான மனிதனுடைய செயல்களைக் குறிப்பிடுவதாய் அமைந்துள்ளது. *மத். 5:21-32; எபிரெயர் 10:16,17.* லேவிய ஆசாரியத்துவ முறைமை மூலமாக தேவன் இஸ்ரவேலரோடு செய்துகொண்ட உடன்படிக்கை அவர்களுடைய நடத்தை சம்பந்தமாக அமைந்திருந்தது. ஒரு இஸ்ரவேலன் அறியாமையால் தவறுதலாக நடந்துகொள்ளும்போது பாவஞ்செய்கிறான். அதனால் அவனுடைய மனச்சாட்சியில் குற்ற உணர்வு உண்டாகிறது. *லேவி. 4:27.* அவர்களது பறிக்கப்பட்ட உரிமையை தேவனுடைய சித்தத்தின்படி மீண்டும் அவர்கள் பெறும் வரையிலும் பாவம் ஆளுகை செய்து வந்தது. *யோவான் 8:34.* மனப்பூர்வமான பாவங்களுக்கு நிவாரண பலி ஒன்றுமில்லை. *லேவி. 5:15; எபிரெயர் 10:26.* மோசேயின் நியாயப்பிரமாணம் செயல்பட்டு வந்த விதத்தைக் குறித்து *ரோமர் 7:7-13* வரை அப்போஸ்தலனாகிய பவுல் விவரித்துக் கூறினான்.

இஸ்ரவேலர் 430 வருடங்களாக எகிப்தில் வாழ்ந்துகொண்டிருந்த காலத்தில் விசுவாசத்தை இழந்துபோனது ஏன்? இதை பற்றி நமக்குத் தகவல் ஏதும் இல்லை; அவர்கள் கெட்டுப் போவதற்குக் காரணமாயிருந்த சில பெலவீனங்களையும், பாவங்களையும் குறித்து நாம் பார்க்கலாம். எல்லா சிறுபிள்ளைகளும் அவர்களது பெற்றார்களால் ஏற்படுத்தப்பட்ட "வாழ்க்கைப் பெட்டியில்" வளர்கிறார்கள். சிறுபிள்ளைகள் வாழ்வின் ஆரம்ப காலத்தில் பழகிக்கொள்ளும் கலாச்சாரத்துக்கேற்பவே அவர்களுடைய புறத்தோற்றமும் "உலகத்தை அவர்கள் பார்க்கும் விதமும்" மீதமுள்ள வாழ்க்கை முழுவதுக்கும் அமையும், இந்தப் பாடத் தொகுப்பின் அறிமுகப் பாடத்தைப் பாருங்கள். தேவனை பகைக்கிறவர்களைக் குறித்து "பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும்" அவர் விசாரிப்பாரென்று மோசே சொல்கிறான்.





*உபாகமம் 5:9.* சிறுபிள்ளைகள் அவர்களுடைய பிதாக்களுடைய பாவங்களுக்குப் பொறுப்பாளர்கள் அல்ல என்றாலும், இந்தப் பிள்ளைகளுடைய ஆரம்ப காலத்தில் இவர்கள் பெற்றோர் செய்த பாவங்களால் உண்டான பாதிப்புகளால் இவர்களும் துன்பப்பட நேரிடும். *எசேக்கியேல் 18:19-23.*

ஒரு ஆணும், ஒரு பெண்ணும் இசைந்து ஒரே **மாம்சமாயிருப் பார்கள்** என்ற தேவனுடைய திருமண உடன்படிக்கையை யாக்கோபு கைக்கொள்ளவில்லை. *ஆதியாகமம் 29:14-30; ஆதியாகமம் 2:24,25.* "மனிதனுடைய ஞானத்தை" அடிப்படையாகக் கொண்ட திருமண உடன்படிக்கையின் விளைவாக தங்கள் சொந்த சகோதர, சகோதரிகள் என்ற உணர்ச்சி இல்லாத பிள்ளைகள் உருவானார்கள். ஒரு ஆண் ஒரு பெண் என்ற தேவனுடைய உண்மையான குடும்ப உடன்படிக்கையை புரிந்துகொள்ளாத பிள்ளைகள் உருவானதற்குக் காரணம் எதுவென்றால், ஒரு தகப்பன் நான்கு தாய்மார்கள் என்ற குடும்ப அமைப்பில் அல்லது "வாழ்க்கைப் பெட்டியில்" அவர்கள் வளரும்படி நேர்ந்தது தான். *ஆதி. 2:24.* யாக்கோபின் பிள்ளைகள் ஆரோக்கியமற்ற மனநிலையில் வளர்ந்து வந்தார்கள். *ஆதி. 29:16-30:24* வரை பார்க்கவும். யாக்கோபுடைய 12 குமாரருடைய நடத்தையில் சகோதர சிநேகம் காணப்படவில்லை. யாக்கோபுடைய குமாரரில் அநேகர் தங்கள் சகோதரன் யோசேப்பை கொலை செய்ய நினைத்தார்கள்; பணத்திற்காகவோ, புகழுக்காகவோ அல்ல வெறும் பொறாமையினாலேயே இப்படி நினைத்தார்கள். அவர்கள் யாவரும் தங்கள் சகோதரனை அடிமையாக விற்க ஒப்புக்கொண்டு பொய்யான ஒரு காரணத்தை சொல்லி, தகப்பனை நம்ப வைத்தார்கள். *ஆதி. 37:17-36.*

இந்த மனிதர்கள் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவ முறைமை யின் காலத்தில் தேவனுடைய "விதிகளையும், கற்பனைகளையும், நியமங்க ளையும், பிரமாணங்களையும்" கைக்கொண்டு அவைகளுக்கேற்ப தங்கள் பிள்ளைகளை வளர்க்கக் கடமைப்பட்டிருந்தார்கள். *ஆதி.26:4.* தேவனுடைய வல்லமையான கரத்தினால் மோசே எகிப்திலிருந்து

விடுதலை பண்ணி அழைத்து வந்த திரளான இஸ்ரவேலர் இந்த மனிதர்களுடைய புத்திரராயிருந்தார்கள். *யாத்திராகமம் 15:6,7.* எகிப்தியருடைய பொருளாதாரத்தை அழிக்கக்கூடிய பல்வேறு வாதைகளை தேவன் அவர்களுக்குள் அனுப்பினார்; இதை இஸ்ரவேலர் கண்ணாரக்கண்டும் கூட தங்கள் "வணங்கா கழுத்துள்ள" சுபாவத்தை அவர்களில் அநேகர் மாற்றிக்கொள்ளவில்லை. *யாத்திராகமம் 5:21; 14:10-12;16:2; உபாகமம் 9:6; 10:16; அப்போஸ்தலர் 7:51.* வணங்கா கழுத்துள்ள ஜனம் தங்களுடைய சொந்த ஞானத்துக்கும் நியாயத்துக்கும் சரி என்று தோன்றுகிறபடியெல்லாம் ஆசைப்படுகிறார்கள். ஆசைப் படுகிறது உடனே நடக்கவேண்டும் என்றும் நினைக்கிறார்கள். வணங்கா கழுத்துள்ள மக்கள் தங்கள் திருமண காரியங்களில் ஒழுங்குடன் செயல்படுவதில்லை. சுயநலமும், கடின இருதயமும் கொண்ட தகப்பன்மார்கள் மற்றும் தாய்மார்களின் செயல்களால் இஸ்ரவேல் புத்திரர் எகிப்தில் இருந்த போது சீரழிந்து போனார்கள். அவர்களுடைய "இருதய கடினத்தின் நிமித்தமே" விவாகரத்துப் பண்ணுவதற்கு மோசே இடங்கொடுத்திருந்தான். *மத்தேயு 19:4-9.* தேவன் பத்துக் கட்டளைகளை அவர்களுடைய கடின இருதயங்களின் மீது எழுதவில்லை; கற்பலகைகளின் மீதே எழுதினார். *யாத். 34:1.* புதிய உடன்படிக்கைக்குரிய பிரமாணங்கள் கிறிஸ்தவர்களுடைய மனதில் வைக்கப்பட்டு, அவர்களுடைய இருதங்களில் எழுதப்படுகின்றன. *எபிரெயர் 8:10.*

விவாகரத்துப் பண்ணுவதை தேவன் விரும்புவதில்லை. *மல். 2:16.* அது ஏன்? இது அவருடைய கட்டளையாக இருக்கிறதே அதனாலேயா? மக்கள் சர்வவல்லமையுள்ள தேவனுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்பதினாலேயா அல்லது தேவனுக்கென்று தங்கள் பிள்ளைகளை வளர்க்க வேண்டிய பொறுப்பு பெற்றாருக்கு இருக்கின்றதே அதினாலேயா? *ஏசா. 43:5-7. எசே. 16:20-22; மத். 18:1-9; எபே. 6:4* பார்க்கவும். கொஞ்சக் காலம் பெற்றாருக்கு சொந்தமாய் இருக்கப்போகின்ற பிள்ளைகளை வளர்ப்பதற்கு அந்தப் பெற்றார் தேவனுக்கு ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும். ஆணும், பெண்ணும் உடலுறவின் மூலம் ஒன்று





சேர்வது மட்டும் திருமண வாழ்க்கையல்ல, இருவருக்கும், தங்கள் சொந்த முன்னேற்றத்தைப் பற்றியும் ஒரே விதமான இலட்சியங்கள் இருக்க வேண்டும். *2 கொரி. 6:14-18.* சிறு பிள்ளைகளை வளர்ப்பதைக் குறித்த தேவனுடைய திருமண உடன்படிக்கையை அவர் பாதுகாக்க விரும்பினார்; அவர் ஆபிரகாமுடைய சந்ததியாரை பயன்படுத்தி இஸ்ரவேல் அல்லாதவர்களை கானான் தேசத்தில் கொன்றுபோடவும், அத்தேசத்தை விட்டு துரத்தி விடவும் முடிவு எடுத்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும். *உபாகமம் 7:1-6.* நோவாவின் நாட்களில் நடந்தது போல தேவனுடைய குமாரர் மனுஷ குமாரத்திகளை திருமணம் செய்து கொள்வதை அவர் விரும்புவதில்லை. *ஆதி. 6:1,2.* தேவனுடைய திருமண உடன்படிக்கை ஏதேன் தோட்டத்தில் ஏற்படுத்தப்பட்டது. இந்த "ஏதேன் திருமண உடன்படிக்கை" இன்றுள்ள தேவனுடைய மக்களுக்குப் பொருத்தமானது என்று இயேசுகிறிஸ்து தெளிவுபடுத்தினார். *மத்தேயு 5:31,32.*

இஸ்ரவேலர்களுடைய முற்பிதாக்களுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருந்த தேசத்தில் வாழ்ந்துகொண்டிருந்த மக்களை அழிக்க வேண்டுமென்று அவர் இஸ்ரவேலருக்குக் கட்டளையிட்டதற்கான காரணம் என்னவென்றால், அந்த ஜனங்கள் விக்கிரகங்களை வணங்குபவர்களாக இருந்தார்கள் என்பதுதான். *உபா. 7:5,16,25,26; 9:3-6.* புறஜாதியார் என்று அறியப்பட்ட மக்களிடமிருந்து தேவன் ஆபிரகாமின் சந்ததியாரை பிரித்தெடுத்ததற்கான மற்றொரு காரணம் இந்த விக்கிரகாராதனைதான். *உபா. 29:16-18.* எல்லாவிதமான விக்கிரகாராதனைப் பற்றியும் தேவன் தம்முடைய மனதில் என்ன நினைக்கிறார் என்பதை பத்துக் கற்பனைகளில் முதல் இரண்டு கற்பனைகள் வெளிப்படுத்துகின்றன. *யாத். 20:1-6; உபா. 4:15-19, 25-28.* நம்முடைய இருதயங்களின் நிலைமையை தேவன் அறிந்திருக்கிறார்; இருந்தபோதிலும் இஸ்ரவேலர்களுக்கு உதவிசெய்யும் எண்ணத்திலேயே அவர்களுடைய விசுவாசத்தை சோதித்தார். *யாத். 20:20; லூக்கா 16:15.* இஸ்ரவேலரின் முற்பிதாக்களோடு தேவன் செய்து கொண்டிருந்த உடன்படிக்கைகள் அவர்களுடைய விசுவாசத்தினிமித்தம் உறுதிபடுத்தப்பட்டன. அப்படியிருந்தாலும், அவர்களுடைய பிள்ளைகள்

விசுவாசமுள்ளவர்களாய் இருந்தால் மாத்திரமே அந்த உடன்படிக்கை களின் வாக்குத்தத்தங்கள் அவர்களுக்குப் பலன் தரும். இஸ்ரவேலர் எகிப்தை விட்டு புறப்பட்டபோது அவர்களில் அநேகர் விசுவாசமில்லாமலோ அல்லது குறைந்த விசுவாசத்துடனோ இருந்தார்கள். புசிப்பது, குடிப்பது போன்ற சில அத்தியாவசியமான தேவைகளை திருப்திப்படுத்திக் கொள்வதற்காக சில அந்நிய சக்திகளின் உதவியை நாடினார்கள். எனவே, சீனாய் மலையின் மீது மோசே 40 நாட்களாக தேவனோடு இருந்தபோது, அவர்கள் ஆரோனை வசப்படுத்தி விக்கிரகத்தைச் செய்யவைத்தார்கள். அவர்கள் விருப்பம் நிறைவேறின போது “இஸ்ரவேலரே, உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள்.” *யாத். 32:4.* பொருளாசையும் விக்கிரகாராதனை தான். *கொலோ. 3:5.* தேவன் மக்களுக்குள் ஏற்படுத்தி இருக்கின்ற இயற்கையான தேவைகளை திருப்திப்படுத்திக்கொள்வதற்கு அவர்கள் பணத்தை சார்ந்துகொள்ளும்போது, விக்கிரகாராதனை என்னும் பிரச்சனை உருவாகின்றது. இந்தப் பிரச்சனையை இஸ்ரவேலர் ஒருபோதும் ஜெயித்ததே இல்லை.

தேவன் அவர்கள் எல்லாரையும் பூமியிலிருந்து அழித்துவிட்டு மோசேயையும், அவனுடைய குடும்பத்தையும் பாதுகாப்பதற்குத் தயாராயிருந்தார். *யாத். 32:9,10.* மோசே கெஞ்சிப் பிரார்த்தித்ததினால், “கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார்.” *யாத். 32:14.* தேவனுடைய உடன்படிக்கைகளின் மீது விசுவாசமுள்ளவர்களாய் இருக்கப்போகின்ற மீதியான ஜனங்களை காப்பாற்றுவதற்காகவே அவர் இந்தப் பிரதான நடவடிக்கையை அடுத்து, ஆசாரியத்துவங்களில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்தார். அவர்கள் எல்லோரையும் காப்பாற்றவேண்டும் என்ற விருப்பம் தேவனுக்கு இருந்தபோதிலும், மீதியாய் இருந்த ஜனங்கள் மாத்திரமே “வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள்” என்ற அடையாளத்தைப் பெற்றுக் காப்பாற்றப்பட்டார்கள். *ரோ. 9:27; கலா. 3:21,22.* லேவி ஆசாரியத்துவ முறைமை வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளை கிறிஸ்துவிடம் கொண்டு வந்து





சேர்ப்பதற்கு தேவனுடைய முக்கியக் கருவியாக செயல்பட்டது. *கலா. 3:23-25.*

தயவுகூர்ந்து இந்தப் பாடத்தின் நோக்கத்தை கவனியுங்கள். தேவன் நம்மையும் இஸ்ரவேலர்களையும் படைத்ததற்கான நோக்கம் நிறைவேறுவதற்கு இந்தப் பிரதான நடவடிக்கை எப்படிப் பிரயோஜனமாக இருந்தது என்பதை புரிந்துகொள்ளச் செய்வதே இந்தப் பாடத்தின் நோக்கம். ஒரு கதையை சரியாகப் புரிந்துகொள்வது என்பது முக்கியமான அம்சமாகும். பரிசுத்த வேதாகமத்தில் அநேக தனி நபர் வரலாறுகளை வாசிக்கிறோம். ஆதியாகமம் முதல் எஸ்தர் புத்தகம் வரையிலும் இது போன்ற சிறு சிறு வரலாறுகளை சம்பவ வரிசைப்படி ஒன்றாக தேவன் அமைத்திருக்கிறார். இந்த தனி நபர் வரலாறுகளை நாம் படிக்கும்போது ஒவ்வொன்றிலும் “தேவன் என்ன செய்ய நினைக்கிறார்” என்று நமக்கு நாமே கேட்டுக்கொள்ளவேண்டும். ஆதாம், நோவா, ஆபிரகாம், மோசே போன்றவர்களுடைய வாழ்க்கையில் தேவன் மேற்கொண்ட **பிரதான நடவடிக்கைகளை** ஜாக்கிரதையாய் கவனிக்கவேண்டும். நாம் தேவனுடைய நித்திய பிள்ளைகளாக உருவாகும்படியான அவருடைய நோக்கம் நிறைவேறுவதற்கு இந்தப் பிரதான நடவடிக்கைகள் எப்படி உதவிகரமாக இருந்தன என்பதை அறிந்துகொள்ளவேண்டும். நம்மைத் தேவன் படைத்த நோக்கத்தை நாம் மனதில் வைத்துக்கொள்ளாவிட்டால், எந்த எண்ணத்தோடு தேவன் பரிசுத்த வேதாகமத்திலுள்ள விவரங்களை நமக்குப் பதிவு செய்து கொடுத்திருக்கிறாரோ, அதே எண்ணத்தோடு அவைகளை வாசிக்க முடியாது. *ரோமர் 16:25-27.*

பரிசுத்த வேதாமகத்தைப் பொறுத்த வரையில், முக்கியமானவராக தேவன் இருக்கின்றார்; எதிரியாக சாத்தான் இருக்கிறான். இருவரும் மக்களுக்காகப் போராடுகின்றனர். இருவரும், நமக்குள் தேவன் படைத்திருக்கின்ற இயல்பான தேவைகளை திருப்திப்படுத்துவதற்கு வேண்டிய உதவிகளை செய்கின்றனர். இவர்கள் யாருடைய உதவியை வேண்டுமானாலும் நம் விருப்பப்படி தேர்ந்தெடுக்கலாம். இயேசுவானவர் இஸ்ரவேலர்களைப் பார்த்து தமது போதனைகளை சோதித்துப் பார்க்கும்படி

தைரியமாகச் சொன்னார். இதை "சோதனை செய்து பார்க்கக்கூடிய விசுவாசம்" என்று அழைக்கலாம். "என்னுடைய உபதேசம் உங்களைப் படைத்த தேவனிடமிருந்து வந்ததுதானா" என்று சோதித்துப் பாருங்கள் என்று இயேசு சொன்னார். "நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்." *யோசுவா 24:15.* கிறிஸ்தவர்கள் செய்கின்ற தீர்மானம் யோசுவா செய்கின்ற இந்தத் தீர்மானம் போலவே இருக்கின்றது. கானான் தேசத்தை சுதந்தரித்துக்கொண்ட இஸ்ரவேலர்களும் இப்படித்தான் சொன்னார்கள். "நம்முடைய தேவனாகிய கர்த்தரையே சேவித்து, அவர் சத்தத்திற்கே கீழ்ப்படிவோம்." *யோசுவா 24:24.* "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளுக்கு" விசுவாசமும், மனந்திரும்புதலும் அவர்கள் சந்திக்கவிருக்கும் போராட்டத்தின் ஆரம்பமாக அமைகின்றன. அவருடைய உடன்படிக்கைகள் மீது விசுவாசத்தோடு நம் வாழ்க்கையைத் தொடரவேண்டும். ஏராளமான இஸ்ரவேலர்கள் இதைச் செய்யவில்லை. ஆனால் மீதியாயிருந்தவர்கள் இதைச் செய்தார்கள். ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தைப் போலவே இது நிகழ்ந்தது:

*அல்லாமலும், இஸ்ரவேல் புத்திரருடைய இலக்கம் சமுத்திரத்தின் மணலத்தனையாயிருந்தாலும், மீதியாயிருப்ப வர்கள் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள் என்றும்; அவர் நீதியோடே சீக்கிரமாய்த் தம்முடைய காரியத்தை நிறைவேற்று வார்; கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார் என்றும் ஏசாயா இஸ்ரவேலரைக்குறித்துச் சொல்லு கிறான். அல்லாமலும் ஏசாயா முன்னே சொன்னபடி: சேனை களின் கர்த்தர் நமக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாக வைக்கா திருந்தாரானால் நாம் சோதோமைப் போலாகி கொமோரா வுக்கு ஒத்திருப்போம். ரோமர் 9:27-29.*

தேவன், இஸ்ரவேல் மத்தியில் தமது ராஜ்யத்தை நிலைநிறுத்துவற்கு லேவிய ஆசாரியத்துவ முறைமையை தேர்ந்தெடுத்தார். மக்களுடைய ஆவிக்குரிய காரியங்களிலும், மாம்சத்துக்குரிய காரியங்களிலும் இந்த ஆசாரியத்துவம் சம்பந்தப்பட்டிருந்தது. தேவன் அவர்களுக்கு





ராஜாவாயிருந்தார். அவர்களுடைய ஆவிக்குரிய பெலவீனத்தின் நிமித்தம் அவர்களுடைய வேண்டுகோளின்படி சவுல் எனப்பட்ட ஒரு மனிதனை அவர்களுக்கென்று ராஜாவாக முடிசூட்டினார். *1 சாமுவேல் 8:5; 12:12,19,20.* ராஜா என்ற தமது வல்லமையை இயேசுகிறிஸ்து உட்பட யாருக்குமே அவர் ஒருபோதும் கொடுத்தது இல்லை. *1 தீமோத்தேயு 6:15,16; 1 கொரி. 15:27,28.* இஸ்ரவேல் தேசம் பூமியின் மீது தேவனுடைய ராஜ்யமாக இருந்தது. இந்தப் பாடத்தொகுப்பில் ஒன்பதாம் பாடத்தின் முக்கிய அம்சம் இது தான். *1 நாளாகமம் 28:5.*

இஸ்ரவேலர்கள் விசுவாசித்து நடக்கமுடியாமற்போனதினால், கண்ணுக்குப் புலப்படக்கூடிய ஆசாரியர்களையும், ராஜாக்களையும் தேவன் அவர்களுக்குக் கொடுத்தார். தம்முடைய ஆளுகையை அவர்கள் மத்தியில் நிலைநிறுத்துவதற்கு தீர்க்கதரிசிகளை பயன்படுத்தினார். *நியாயாதிபதிகள் 4:4; 2 சாமுவேல் 7:4; 2 இராஜாக்கள் 2:1,2; சங்கீதம் 113:1-9.* "நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்" என்று தேவன் மோசேயைக் குறித்துச் சொல்லியிருந்த போதிலும், அவன் அவருடைய முகத்தை ஒருபோதும் பார்த்ததே இல்லை. *எண்ணாகமம் 12:6-8; யாத்திராகமம் 33:12-23.* சாமுவேல் தீர்க்கதரிசியாய் இருந்து தேவனுடைய செய்திகளை மக்களுக்குச் சொன்னான். *1 சாமுவேல் 2:26; 7:5; அப்போஸ்தலர் 3:21-26.* இவன் நியாயதிபதியாகவும் செயல்பட்டு வந்தான். *1 சாமுவேல் 7:15.* அநேக ஆண்டுகளாக அடிமைகளாக இருந்த திரளான ஒரு மக்கள் கூட்டத்தையே, ஒரு பெரிய தேசமாக தேவன் உருவாக்கினார். இதன் மூலம் "கர்த்தரே தேவன், வேறொருவரும் இல்லையென்பதைப் பூமியின் ஜனங்களெல்லாம்" அறிந்துகொள்ள வாய்ப்பு உண்டானது. *1 இராஜாக்கள் 8:59.* புறஜாதி மக்களுக்கு தேவன் தம்மைப்பற்றி தெரியப்படுத்துவதற்கு இஸ்ரவேல் மக்களைப் பயன்படுத்தினார். ஆயினும், இஸ்ரவேலர் இந்த வேலையை ஒழுங்காகச் செய்யவில்லை. தேவனுடைய தேசம் என்பதே ஒன்பதாவது பாடத்தின் தலைப்பு.

இஸ்ரவேலர்களுடைய இயல்பான தேவைகளை சந்திப்பவராக தேவன் இருந்தார்; இதினிமித்தம் அவர்கள் தம்மிடம் அன்புகூரும்படி அவர்களுக்குள் விசுவாசத்தை உருவாக்குவதே அவருடைய குறிக்கோளாய் இருந்தது. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்." *எபிரெயர் 11:6.* முதலாவதாக, விக்கிரகங்களின் மீதிருந்து அவர்கள் விசுவாசத்தை அகற்றிக் கொள்ளவேண்டியது அவசியமாய் இருந்தது. இதற்காக இஸ்ரவேலர் தொடர்ந்து போராடினார்கள். அடிக்கடி தோற்றுப்போனார்கள். அடுத்ததாக, அவர்களுடைய பிள்ளைகள் சுயநலமாயிராமல், கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவக்கூடிய அன்புள்ளம் கொண்டவர்களாக உருவாவதற்கு இவர்கள் அன்புள்ள தகப்பன்மார்களாகவும், தாய்மார்களாகவும் ஆகவேண்டியது அவசியமாய் இருந்தது. ஓராயிரம் வருடங்கள் கழித்து, கீழ்க்காணும் "இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம், முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது" என்று இஸ்ரவேலர்களைப் பார்த்து இயேசு சொன்னார்.

*இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. மத்தேயு 22:37-39.*

இஸ்ரவேல் மக்களுக்குள் இருந்த சிறு பிள்ளைகள், தேவன் கற்பலகைகளில் எழுதிக்கொடுத்த மீதமுள்ள ஐந்து கட்டளைகளை தங்களுடைய பெற்றோர் கைக்கொள்ளாத பட்சத்தில், அவர்களைக் கனப்படுத்தமுடியாது. பார்க்கவும் *யாத்திராகமம் 20:12-17.* சிறு பிள்ளையானவன் தன்னுடைய பெற்றோர் நம்புகிற காரியங்களை நம்புகிறான். அவன் முதிர்ச்சியடைகிற வரைக்கும் இதே நிலைமை நீடிக்கிறது. இஸ்ரவேலை சேர்ந்த பெற்றோர், முதல் கட்டளையை கேட்டு,





புரிந்துகொண்டு, விசுவாசிக்கவேண்டியது அவசியமாய் இருந்தது. *யாத்திராகமம் 20:1-6; உபாகமம் 6:1-9.* இஸ்ரவேல் மக்கள் தங்களை "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள்" என்று அடையாளப்படுத்திக்கொள்வதற்கு முன்பு, தங்கள் மீது தேவன் அக்கறைக்கொண்டுள்ளார் என்று விசுவாசம் கொள்ளவேண்டியது அவசியமாயிருந்தது. ஆபிரகாம் காலம் தொடங்கி எல்லாக் காலத்திலும் தேவனுடைய மக்களுக்கு "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள்" என்ற அடையாளம் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், பவுல் சொல்வது போல, "இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே." *ரோமர் 9:6.* லேவி ஆசாரியத்துவ காலத்தில் விசுவாசத்தோடு வாழ்ந்த இஸ்ரவேலர், தங்கள் முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களோடு தேவன் பண்ணியிருந்த **வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாயிருந்தார்கள்**. *ரோமர் 2:1-4, 28,29; கலாத்தியர் 6:15.*

இஸ்ரவேலருடைய விசுவாசத்தைக் கட்டி எழுப்புவதற்காக தேவன் தம்முடைய உடன்படிக்கைகளோடு கூட மாம்சத்துக்குரிய பாதுகாப்பையும், ஆவிக்குரிய வழிநடத்துதலையும் அவர்களுக்கு வழங்கினார். பார்க்கவும் *யாத்திராகமம் 19:5,6; 40:34-38; லேவியராகமம் 26:3-13; உபாகமம் 7:6;8:1-9; 28:1-14.* நமது தேவைகளை நிறைவுசெய்யும் ஒன்றின் மீது மட்டுமே நாம் விசுவாசம் வைப்போம். விசுவாசம் கொள்ளும்படி தேவன் யாரையும் பயமுறுத்துவதில்லை. ஆசாரியத்துவ முறைமைகள் மூலமாக அவர் உடன்படிக்கைகளை ஏற்படுத்துகின்றார். உடன்படிக்கைகளோடு இணைக்கப்பட்ட கட்டளைகள், தேவனிடமிருந்து வந்த நமது ஆவிகள் நமது சரீரங்களில் வாழ்வதை பற்றி விவரிக்கின்றன. *பிரசங்கி 12:7; 2 கொரி. 4:7.* தேவன் நம்முடைய தேவைகளை எல்லாம் திருப்திப்படுத்துவார் என்று நாம் நம்பிக்கைக் கொள்ளலாம். அவருடைய உடன்படிக்கைகளின் மீது விசுவாசம் கொண்ட இஸ்ரவேலர்கள், நீதியின் ஈவாகிய கிருபையை பெற்றுக்கொண்டார்கள். உடன்படிக்கைகளைப் புரிந்துகொண்டால் தான், அவைகளின் மீது நாம் விசுவாசம் வைக்க முடியும்.

நம்மைப் பற்றிய மற்றொரு முக்கியமான விஷயத்தையும் புரிந்துகொள்ள வேண்டும். நம்முடைய தேவைகளை திருப்திப்படுத்து வார்கள் என்று யாரையெல்லாம் நம்புகிறோமோ, அவர்கள் எல்லாரிடமும் சகோதர சிநேகத்தோடு அன்புகூருகிறோம். ஃபிலடெல்ஃபியா (Philadelphia) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ள அன்பின் வகையையே இது குறிக்கின்றது. சிலர், மற்றவர்கள் தங்கள் தேவைகளைச் சந்திப்பதற்கு எந்த உதவியையும் செய்யாதபோதிலும், மற்றவர்களிடம் அன்பு கூருகின்றார்கள். இது அகப்பே (Agape) என்ற அன்பின் வகையைக் குறிக்கிறது. பொறுப்புள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடம் இப்பேர்ப்பட்ட அன்பையே காண்பிக்கிறார்கள். தேவன் தம்முடைய பிள்ளைகள் மீதும், எதிரிகள் மீதும் இப்பேர்ப்பட்ட அன்பையே காண்பிக்கிறார். மக்கள் படைக்கப்பட்டிருக்கின்ற நோக்கத்தை தேவன் அறிந்தவராய், அவர்கள் படைக்கப்பட்டிருக்கின்ற விதத்திற்குத் தகுந்தபடி உடன்படிக்கைகளை ஏற்படுத்துகின்றார் என்று அவர்கள் விசுவாசம் கொள்ளவேண்டும். *மத்தேயு 6:25.* தயவுகூர்ந்து ஒன்றாம் பாடத்தையும் இரண்டாம் பாடத்தையும் திருப்பிப் பாருங்கள். நம்முடைய இயல்பான தேவைகளை தேவன் திருப்திப்படுத்துவதால், அவரிடம் அன்புகூருகின் றோம். இதுவே லீஸ்திராவில் இருந்த விக்கிரகத்தை வணங்கும் மக்களுக்கு, பவுல் முன் வைத்த செய்தியாகும். *அப்போஸ்தலர் 14:14-17.*

தேவன், லேவிய ஆசாரியத்துவ முறைமையை மாற்றுவதற்குக் காரணமாயிருந்தவைகளில் இரண்டினை குறிப்பிட்டுள்ளபடி புரிந்து கொள்கிறோம். இஸ்ரவேலருடைய அடிப்படைத் தேவைகளை தேவன் சந்தித்தது மட்டுமல்லாமல், தம்முடைய ஐக்கியத்தையும் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார். அவர்களுக்கு கனத்தையும் கொடுத்து, பெரிய தேசமாக மாற்றி மகிமைப்படுத்தினார். அதே சமயத்தில் தம்முடைய கட்டளைகளையெல்லாம் கைக்கொள்ளவேண்டும் என்ற நிபந்தனையை யும் அவர்களுக்கு முன்வைத்தார். *யாத்திராகமம் 19:5,6.* புகழ்ச்சி, கனம், மகிமை ஆகிய உயரிய தேவைகளை திருப்திப்படுத்துவதற்கு இந்த வாக்குத்தத்தம் நம்பிக்கையை ஏற்படுத்தியது. *1 பேதுரு 1:7.*





ஆபிரகாமின் தேவனால் வழங்கப்பட்ட ஆசீர்வாதங்களைக் கண்டு கொண்டவர்கள் எவர்களோ அவர்கள் அவருடைய நீண்ட கால உடன் படிக்கைகளின் மீதுள்ள விசுவாசத்தில் வளர்ச்சியடைந்தார்கள். அவர்களால் தங்கள் முழு இருதயங்களோடும், முழு ஆத்துமாக்களோடும், முழு மனங்களோடும் தேவனிடத்தில் அன்புகூர முடிந்தது. இதன் மூலம் தங்களை சுற்றியிருக்கும் மக்கள் யாவரும் தேவனுடைய சாயலின்படி படைக்கப்பட்டவர்கள் என்பதை புரிந்துகொண்டு, அவர்களிடத்தில் அன்புகூரமுடிந்தது. *யாக்கோபு 3:9.* தேவன் எதிர்பார்த்தபடி நடந்துகொண்டவர்களை பற்றிய விவரங்களை *எபிரெயர் 11:32-40* வரை உள்ள வசனங்களில் பார்க்கலாம்.

எகிப்தை விட்டு வெளியேறிய இஸ்ரவேலர்கள் மற்றொரு பிரச்சனையை எதிர்கொண்டார்கள். அவர்கள் பாவிகளாயிருந்தும் தேவனுடைய ஜீவப்பிரமாணத்தைப் பற்றி அறியாதவர்களாயிருந்தார்கள். தேவனுடைய ஜீவப்பிரமாணங்களைப் பற்றி ஆபிரகாம் அறிந்திருந்தான். *ஆதியாகமம் 26:4.* இதேபோல் ஈசாக்கும், யாக்கோபும் அவனுடைய 12 பிள்ளைகளும் கூட அவைகளை அறிந்திருந்தார்கள் என்று நாம் கருதலாம். எகிப்துக்குப் போய்ச் சேர்ந்த ஆபிரகாமுடைய சந்ததியார் தேவன் மனிதனை படைத்ததற்கான நோக்கத்தையும், படைக்கப்பட்ட விதத்தையும் பற்றிய உபதேசங்களை அறியவில்லை. 430 வருடங்களாக எகிப்தில் வாழ்ந்துகொண்டிருந்தபோது, அவர்களுடைய பாவங்கள் அவர்களை ஆளுகை செய்து ஆவிக்குரிய மரணத்தை ஏற்படுத்தின. *ரோமர் 5:21.* அவர்களுடைய பாவத்தின் நிமித்தம் குற்றஞ்சாட்டப்பட்டு அவர்கள் தண்டிக்கப்படவில்லை. இருந்தபோதிலும், அவர்களுடைய வாழ்வை அந்தப் பாவம் ஆண்டுகொண்டது. சொல்லப் போனால், அவர்கள் வாழ்ந்த வாழ்வு, தேவன் அவர்களுக்கென்று ஏற்படுத்தின வாழ்க்கையைப் போல் இருக்கவில்லை. அந்த வாழ்வினை வாழ்க்கைத் தரத்திலே சேர்க்கவே முடியாது. ஆகையினால் அதனை மரணம் என்று தான் சொல்லவேண்டும்.

“நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது.” *ரோமர் 5:13.* ஆதாம் முதல் மோசே வரை உள்ள காலக்கட்டத்தில் இதே சூழ்நிலைதான் இருந்து வந்தது. “ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்” என்று வேதம் குறிப்பிடுவதை ரோமாபுரியிலுள்ள பரிசுத்தவான்களுக்குப் புரியவைப்பதற்காக பவுல் இந்த வசனத்தைப் பயன்படுத்தினான். *வசனம் 14,15-19.* அதன் பிறகு நியாயப்பிரமாணம் இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட காரணத்தையும் தெரிவித்தான்; “மீறுதல் பெருகும்படிக்கு நியாயப் பிரமாணம் வந்தது.” *ரோமர் 5:20.*

“ஆதாமுக்குள்” வாழ்கின்ற எல்லா மனிதர்களும், ஜீவப்பிரமாணத் தை மீறுகிறார்கள். செய்யவேண்டுமென்று நாம் அறிந்த நன்மையை செய்யாமற்போகும் போது, இந்த மீறுதலுக்கு உட்படுகிறோம். இஸ்ரவேலர்களுடைய பாவத்தை மோசேயின் நியாயப்பிரமாணம் அவர்களுக்கு தெரியப்படுத்தியதால், அவர்களுடைய “பாவம் அதிகரித்தது.” அவர்கள் **பாவநிவாரணபலியை செலுத்தாமற்போனால்** அவர்கள் வாழ்வு முழுவதையும் அவர்களுடைய பாவமே ஆண்டுகொள்ளும். லேவிய ஆசாரியத்துவ முறைமையைச் சார்ந்த பிரமாணமானது, பாவத்தை குற்றப்படுத்தியது. ஆசாரியத்துவ முறைமை மாற்றப்பட்டபோது பிரமாணமும் மாற்றப்பட்டது. *எபிரெயர் 7:11,12.* இந்த ஆசாரியத்துவ முறைமையின்படி **அறியாமல் செய்த பாவங்களுக்காகவும்** பலிகள் செலுத்தப்பட்டன. “மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்.” *1 கொரி. 15:56.* மோசேயின் நியாயப் பிரமாணத்தைப் போன்ற பிரமாணத்தைப் பற்றியே இங்கு பவுல் பேசுகிறான். இந்தக் காலத்தில் பாவங்கள் நிமித்தம் பலி செலுத்தப்பட்டதாக ஆதியாகமத்தில் எந்தக் குறிப்பும் இல்லை என்பதை தயவுகூர்ந்து கவனியுங்கள். ஜனங்களின் பாவத்தைக் குறித்து ஜீவப் பிரமாணம் குற்றப்படுத்தவில்லை. இதுவே இதற்குக் காரணம். “மரணம் ஆண்டு கொண்டு” என்று நாம் வேதத்திலே வாசிக்கிறதினால் அவர்கள் பாவஞ்செய்தார்கள் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. *ரோமர் 5:13,14.*





நடைமுறைக்கு பொருந்தக்கூடிய விதத்தில் பாவத்தைக் குறித்து மோசேயிடம் தேவன் விவரித்துச் சொன்னார். பார்க்கவும் *யாத்திராகமம் 18:19,20; 20:22,23; எண்ணாகமம் 12:4-8.* பத்துக் கற்பனைகளோடு சேர்த்து கூடுதலாக “**செய்யாதீர்கள்**” என்னும் அர்த்தத்தில் பல விளக்கங்களையும் அவர் தந்தருளினார். பார்க்கவும் *யாத். 19-ஆம்* அதிகாரம்; *லேவியராகமம் 17-19* அதிகாரங்கள். எடுத்துக்காட்டாக, பச்சைக் குத்திக்கொள்வது தடை செய்யப்பட்டிருந்தது. *லேவி. 19:28.* “அறியாமல் பாவஞ்செய்யும்போது” பரிகாரமாக என்ன செய்யவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருந்தது. சில குறிப்பிட்ட பலிகளையும் அவர்கள் செலுத்தவேண்டியிருந்தது. பார்க்கவும் *லேவியராகமம் 4,5* அதிகாரங்கள். ஆணோடே ஆண் உடலுறவு கொள்வது போன்ற இயற்கைக்கு முரண்பட்ட காரியங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. *லேவி. 20:13.* பல்வேறு வகையான பாவங்களைக் குறித்தும், அவைகளுக்கான பலிகளைக் குறித்தும் அறிந்துகொள்ள லேவியராகமம் புத்தகத்தை தயவுகூர்ந்து வாசியுங்கள். தேவன் இஸ்ரவேலர்களை கிறிஸ்துவிடம் கொண்டு வருவதற்காக “காரியக்காரருக்கும், வீட்டு விசாரணைக்காரருக்கும்” அவர்கள் கீழ்ப்பட்டிருக்கும்படி செய்தார். லேவிய ஆசாரியத்துவ முறைமையில் கொடுக்கப்பட்டிருந்த பிரமாணமானது அவர்களுக்கு ஆவிக்குரிய சட்டமாகவும், தேசிய சட்டமாகவும் இருந்தது. பார்க்கவும். *யாத். 21:1-23:9.*

ஜீவப்பிரமாணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும் வாழ்ந்தவர்களின் பாவங்களைக் குற்றப்படுத்தி அவர்களை தண்டிக்கவில்லை, இருப்பினும், ஆவிக்குரிய ஜீவப்பிரமாணத்தின்படி நடக்காத உள்ளான மனிதர்கள், இறந்த நிலையிலேயே இருந்தார்கள். ஆவிக்குரிய மரணமானது நம்மை உண்டாக்கின தேவனை விட்டு விலகி வாழ்வதாகும். தங்களை உருவாக்கினவரின் ஆலோசனைகளின்படி அவர்கள் வாழாததினால், அவர்கள் ஜீவனை அறியவில்லை. *யோ. 1:3,4.* ஆவிக்குரிய மரணம் ஒரு ஜனக்கூட்டத்தை ஆளுகை செய்வதால் என்ன நேரிடுகிறது என்பதை *ரோமர் 1:18-32* வசனங்களில் பவுல்

வெளிப்படுத்தினான். சரீரப்பிரகாரமான இஸ்ரவேலர்கள் ஆவிக்குரிய மரணத்தை தங்களுக்கு ஏற்படுத்துகிறது எந்த பாவம் என்பதை அறியாதிருந்தார்கள். இதனால் பாவம் செய்வதே அவர்கள் கலாச்சாரமாக மாறியது. இன்றைய உலகத்தின் கலாச்சாரமும் இந்த நிலைமையில் தான் உள்ளது. *1 யோவான் 2:15-17.*

தேவன் தமது மக்களுக்குப் பாவங்களைப் பற்றித் தெரியப்படுத்துவதற்காக பத்துக் கட்டளைகளை பயன்படுத்தினார். *ரோமர் 3:19,20.* இந்தச் செய்தியை, அறிந்தவர்கள் “வணங்கா கழுத்துள்ளவர்களாய்” இருக்கமாட்டார்கள். தேவனுடைய பிள்ளைகள் என்ற அடையாளத்தை உடைய கிறிஸ்தவர்களுக்கு குற்றமனச்சாட்சி இருக்குமானால், அது அவர்களை தாழ்ந்த நிலைக்குக் கொண்டுபோய்விடும். நாம் பாவம் செய்யக் காரணமான பிரச்சனையை சரி செய்துகொள்ளவேண்டும். நம்முடைய குறைபாடுகளை நாம் மேற்கொள்ளாமல், அதனால் உண்டான குற்ற உணர்ச்சியையும், பாவங்களையும் மேற்கொள்ள முடியாது. “நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.” *1 கொரி. 15:57.* கிறிஸ்தவர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட தேவனுடைய உடன்படிக்கையானது, மனந்திரும்பும் பாவிகளுடைய மனச்சாட்சியிலிருந்து குற்ற உணர்ச்சியினை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக நீக்குகின்றது. *எபி. 8:12;10:1-3.* பாவ நிவாரண பலிகளாக செலுத்தப்பட்ட மிருகங்களின் இரத்தத்தின் மீது இஸ்ரவேலருக்கிருந்த விசுவாசம், அவர்களுடைய மனச்சாட்சியிலிருந்து குற்ற உணர்ச்சியினை நீக்காததினால், அவர்கள் பாவங்களை தேவன் மறக்கவும் முடியவில்லை. *எபிரெயர் 8:12; 9:13,14;10:1-4.*

லேவிய ஆசாரியத்துவ காலத்தில், இஸ்ரவேல் ஜனத்திடமிருந்த மற்றொரு குறைபாட்டை தேவன் சரி செய்ததை குறித்துப் பார்க்கலாம். எகிப்தில் அநேக ஆண்டுகளாக ஆளோட்டிகளால் இஸ்ரவேலர் அவதிப்பட்டு வந்ததினால், அவர்களுக்கு ஒருங்கிணைந்து செயலாற்றும் திறமை குறைவாய் இருந்தது. தேவன் தாமே அவர்கள் கர்த்தராய் இருந்து





அவர்களை வழிநடத்தி, அவர்களது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு வேண்டிய திட்டங்களை வகுத்துக் கொடுத்தார். எடுத்துக்காட்டாக, எத்திரோவின் ஆலோசனைக்கு இணங்க, மோசே இஸ்ரவேலின் 12 கோத்திரங்களிலிருந்து தலைவர்களை தேர்ந்தெடுத்து, ஊழியம் செய்வதில் தனக்கு உதவியாய் இருக்கும்படி அவர்களை நியமித்துக்கொண்டான். *எண். 11:16,17; யாத்திராகமம் 24:1.* ஒரு சமயம் இஸ்ரவேல் ஜனங்கள் மோசேயிடம் இறைச்சிக்காக முறையிட்டு அழுதார்கள். இதனால், அவர்களை வழிநடத்துவது தனக்கு மிகவும் கடினமாக இருப்பதாக தேவனுக்குத் தெரியப்படுத்தினான். ஆகையினால், மோசேக்கு கொடுத்திருந்த ஆவியை அவர் 70 பேர் மீதும் வைத்தார். பார்க்கவும். *எண்ணாகமம் 11:13-17.* ஏகாதிபத்திய ஆட்சியையோ, ஜனநாயக ஆட்சியையோ தேவன் விரும்புவதில்லை. அவர் சர்வவல்லமையுள்ள தேவனாயிருக்கிறார். “சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான்.” *எபிரெயர் 3:5.* கானான் தேசத்தில் தேவனுடைய ஜனமாக வாழும் பொருட்டு இந்த மக்களுக்கு தேவன் செய்த உதவிகளை புரிந்துகொள்ளமுடியும். தயவுகூர்ந்து எண்ணாகமம் புத்தகத்தை வாசியுங்கள். எண்ணாகமம் புத்தகத்திலுள்ள 36 அதிகாரங்களில் 16 அதிகாரங்கள் “கர்த்தர் மோசேயை நோக்கி” என்று ஆரம்பிக்கின்றன. இருந்தாலும் கூட, தேவனுடைய கோபத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை காப்பாற்றுவதற்காக ஒன்றுக்கும் மேற்பட்ட தடவை மோசே தேவனை நோக்கி கெஞ்சுவதாகவும் பார்க்கிறோம். *எண்ணாகமம் 14:12;16:21.* இந்த விவரங்களெல்லாம் கிறிஸ்தவர்களுக்குப் பயன்படுவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ளன. பார்க்கவும் *ரோமர் 15:4; 1 கொரி. 10:6-12; எபிரெயர் 3:7-11; 12:28,29.*

*அப்பொழுது கர்த்தர் : உன் வார்த்தையின்படியே மன்னித்தேன். பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருக்கும் என்று என்னுடைய ஜீவனைக் கொண்டு*

*சொல்லுகிறேன். என் மகிமையையும், நான் எகிப்திலும், வனாந்திரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும், என் சத்தத்துக்குச் செவிகொடாமல், இதனோடே பத்துமுறை என்னைப் பரீட்சைப்பார்த்த மனிதரில் ஒருவரும், அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்; எனக்குக் கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக் காணமாட்டார்கள். எண். 14:20-23.*

மனுக்குலத்தை சிருஷ்டித்ததற்கான தேவ நோக்கத்துடன் தொடர்புடைய லேவிய ஆசாரியத்துவ முறைமை, எவ்வளவு மதிப்புள்ளது என்று புரியவைப்பதே இந்தப் பாடத்தின் நோக்கம். "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு", அவருடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கென்று தேவன் எல்லா மக்களையும் உருவாக்கினார். தேவனுடைய எல்லா பிரதான நடவடிக்கைகளும் தேவனை நேசிக்கும்படி மக்களுக்குக் கற்றுக்கொடுப்பதையே முக்கிய அம்சமாகக் கொண்டிருந்தன. *ரோ.8:28,29; 2 பேது. 3:9.* "அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து" சேர்க்கத்தக்க இயேசுவின் ஊழியத்தில் லேவிய ஆசாரியத்துவ முறைமைக்கு ஏதாகிலும் பங்கிருந்ததா? *எபிரெயர் 2:10.* லேவிய ஆசாரியத்துவ முறைமையைப் பற்றியும், மோசேயின் வழிநடத்துதல் மூலமாக தேவனுடைய செயல்பாட்டைப் பற்றியும் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதை தயவுகூர்ந்து வாசியுங்கள். *கலாத்தியர் 4:1-7.* இந்த வசனம் லேவிய ஆசாரியத்துவ முறைமையை தேவன் ஏற்படுத்தியது யூதர்களுக்கு எப்படி உதவிகரமானதாக இருந்தது என்பதை விளக்குகிறது. ஆனால், புறஜாதிகளுக்கு இது உதவிகரமாக இருந்ததா? ஆம், அவர்களுக்கும் இது உதவியாகத்தான் இருந்தது. *ரோமர் 3:29-31.*

ஆபிரகாமுடனான தேவனுடைய உடன்படிக்கையில் புறஜாதிகளுக்கு ஆசீர்வாதங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டன. *ஆதி. 12:3.* இஸ்ரவேலருக்கு நன்மை உண்டாகவும், உலகத்திலுள்ள





மக்களுக்கு நம்பிக்கை உண்டாகவும், தேவனுடைய உதவியினால் எகிப்திலிருந்த இஸ்ரவேலர் விடுதலையாவது அவசியமாய் இருந்தது. "ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன; சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார், அந்தச் சந்ததி கிறிஸ்துவே." *கலாத்தியர் 3:16.* "அவராலேயன்றி வேறொரு வராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்." *அப்போஸ்தலர் 4:12.* இந்த வாக்கியம் ஆதாம் முதல் கிறிஸ்து வரையிலும் விசுவாசமுள்ளவர்களாய் வாழ்ந்த எல்லாரையும் உட்படுத்தி பேசுகிறது. இயேசு கிறிஸ்துவுக்குள்ளான ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் தேவன் கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கும் வரையிலும், இவர்கள் தேவனுடைய உடன்படிக்கையில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை முழுமையாகப் பெற்றுக்கொள்ளவில்லை. *எபே. 1:3; எபி. 11:39,40.*

இந்தக் காரணத்துக்காக "ஆசரிப்புக் கூடாரத்துக்கு" உள்ளேயும், வெளியேயும் இருந்தவைகளைப் பற்றி நாம் ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும்; லேவிய ஆசாரியத்துவ முறைமையை பற்றிய பாடத்தில் இதை நாம் கடைசியாக பார்க்கிறோம். அதன் தனித் தன்மையைக் குறித்தும் அதற்கான வேலைப்பாடுகளைக் குறித்தும் அறிந்துகொள்வதற்கு *யாத்திராகமம் 36* முதல் *38*ஆம் அதிகாரம் வரை பாருங்கள். பரலோகத்தில் நமது ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து நம் நிமித்தம் செய்கின்ற ஊழியத்தின் **நிழலாக** இது இருப்பதினால், இந்த ஆசரிப்புக் கூடாரத்தின் அமைப்பைக் குறித்து அறிந்துகொள்வதில் கிறிஸ்தவர்களாகிய நாம் அதிக ஆர்வம் காட்டுகிறோம்.

*இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது; அப்படியே, மோசே கூடாரத்தை உண்டுபண்ணப்போகையில்: மலையிலே*

*உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார். எபிரெயர் 8:5.*

இஸ்ரவேலர் 40 வருடங்கள் வனாந்திரத்தில் சுற்றித்திரிந்து கொண்டிருந்தபோது, தேவன் தமது நீதியைக் குறித்து அவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். இந்தக் காலத்தில் இஸ்ரவேலருடைய கூடாரங்கள் மத்தியில் ஆசரிப்புக் கூடாரத்தை லேவி கோத்திரத்தார் அமைத்து வந்தனர். *எண்ணாகமம் 18:1-32.* ஆரோன், இஸ்ரவேலர் களுக்காக ஒரு விக்கிரகத்தை உருவாக்கினபோது, லேவியர்கள் தேவன் நிமித்தம் மோசேயின் பட்சத்தில் நின்றதினால், "கர்த்தர் இன்றைக்கு உங்களுக்கு ஆசீர்வாதம் அளிக்கும்படி, இன்றைக்கு நீங்கள் அவனவன் தன்தன் மகனுக்கும் சகோதரனுக்கும் விரோதமாயிருக்கிறதினால், கர்த்தருக்கு உங்களைப் பிரதிஷ்டைபண்ணுங்கள் என்று மோசே சொல்லியிருந்தான்." *யாத்திராகமம் 32:29.* பிரதான ஆசாரியர்கள் லேவி கோத்திரத்தில் ஆரோனுடைய சந்ததியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். *எண்ணாகமம் 20:22-26.* "உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் செல்லும் **மாறாத உடன்படிக்கை**" என்று தேவன் குறிப்பிட்ட உடன்படிக்கையை இவர்கள் கைக்கொண்டு வாழ்ந்தார்கள். *எண்ணாகமம் 18:19.* மாறாத உடன்படிக்கையை பற்றிய விஷயங்களை *எண்ணாகமம் 18:8-24* வரை பார்க்கிறோம். ஆரோனும் அவனுடைய நான்கு பிள்ளைகளும் முதல் ஆசாரியராயிருந்தார்கள்; ஆயினும், நாதாபும், அபியூவும் அந்நிய அக்கினியை கொண்டு வந்ததினால், கர்த்தரால் அனுப்பப்பட்ட அக்கினியில் அகப்பட்டு மரித்துப்போனார்கள். *லேவி. 8:30; 9:1-24;10:1-3.* ஆசரிப்புக் கூடார ஊழியங்கள் மூலமாக, மக்களுக்காக தேவனை நெருங்கும் ஊழியத்தை ஆசாரியர்கள் செய்து வந்தார்கள்; ஆயினும் சுத்திகரிப்பின் நாளன்று **மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள்** பிரவேசித்த ஆரோன் பிரதான ஆசாரியனாயிருந்தான். *லேவி. 16:1-22; எபிரெயர் 9:1-10.*





"இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல் தேதியில்" ஆசரிப்புக் கூடாரம் அமைக்கப்பட்டது. "அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று." *யாத்திராகமம் 40:17,34.* "சாயங்காலமானபோது, வாசஸ்தலத்தின் மேல் அக்கினிமயமான ஒரு தோற்றம் உண்டாயிற்று; அது விடியற்காலமட்டும் இருந்தது. இப்படி நித்தமும் இருந்தது; பகலில் மேகமும், இரவில் அக்கினித் தோற்றமும் அதை மூடிக்கொண்டிருந்தது." *எண்ணாகமம் 9:15,16.* ஆவியாயிருக்கிற தேவனை காணும்படி தங்கள் "விசுவாசக் கதவினை" திறந்த நிலையில் வைப்பதற்கு இஸ்ரவேலருக்குப் போதுமான விசுவாசம் இல்லாதிருந்ததினால், இந்த ஏற்பாட்டை தேவன் செய்தார். *யோவான் 4:21-24; அப்போஸ்தலர் 14:27.* தேவனுடைய ராஜ்யத்தில் சாலொமோன் ராஜாவாக ஆட்சி செய்த காலத்தில், இந்த வாசஸ்தலத்துக்கு பதிலாக அவன் தேவாலயத்தைக் கட்டினான். *1 இராஜாக்கள் 6:14; 8:1-13.* இஸ்ரவேலருடைய பாவங்களை சுத்திகரிப்பதற்கு தேவன் செய்த ஏற்பாடே இதுதான்; இதன் மூலம் அவர்களுக்குள் இவருடைய ராஜ்யம் இருப்பதை புறஜாதிகள் பார்க்க முடிந்தது.

பஸ்கா பண்டிகை மற்றும் சுத்திகரிப்பின் நாள் போன்ற ஆவிக்குரிய காரியங்களை அவர்களுக்கு தேவன் ஏற்படுத்தினார். அவர்களுடைய தேசத்திலுள்ள எல்லாருக்காகவும் இந்த சுத்திகரிப்பு செய்யப்பட்டது. *லேவி. 16:34.* "வருஷத்தில் மூன்றுதரம் எனக்குப் பண்டிகை ஆசரிப்பாயாக." *யாத்திராகமம் 23:14-17* பார்க்கவும். இந்தப் பண்டிகைகளின் கால அட்டவணையை *லேவி. 23:1-44* வரை உள்ள வசனங்களில் பாருங்கள். இஸ்ரவேலர்கள் தங்கள் தசமபாகத்தை மாத்திரம் அல்லாமல், பல பொருட்களையும் கொடுக்கும்படி போதிக்கப்பட்டிருந்தார்கள். "வருஷந்தோறும் நீ விதைக்கிற விதைப் பினாலே வயலில் விளையும் எல்லாப் பலனிலும் தசமபாகத்தைப் பிரித்து" கொண்டு வர வேண்டும் என்று தேவன் சொல்லியிருந்தார். *உபாகமம் 14:22,28,29.*

தேவன் மனிதர்களோடு இணைந்து செயல்படுவதே கிறிஸ்தவர்கள் அறிந்துகொள்ளவேண்டிய முக்கிய அம்சமாக இருக்கின்றது; இதினிமித்தமே லேவிய ஆசாரியத்துவ காலத்தை அதிலும் விசேஷமாக வனாந்திர பிரயாணத்தைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளுகிறோம். இஸ்ரவேலர்கள் கீழ்ப்படியாதவர்களாகவும், தேவபக்தி இல்லாதவர்களாக வும் இருந்தார்கள் என்று தேவன் அறிந்திருந்தபோதிலும், அவர்களுக்குள் இருந்து தமது உடன்படிக்கைகளுக்குக் கீழ்ப்படிபவர்களை சாத்தானிட மிருந்து மீட்கும் பொருட்டு தமது வல்லமையையும் ஞானத்தையும் பயன்படுத்தினார். தீமைக்குப் பதிலாக நன்மையை தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்பு இருந்தும், தேவனும், நன்மை இன்னதென்று அறியாத மனுக்குலமும், சந்திக்கும் ஒரு அபூர்வ நிகழ்ச்சியாக இது அமைந்தது. யாக்கோபுடைய 12 பிள்ளைகளும் எகிப்துக்கு போய்விட்ட பிற்பாடு, அவர்களுடைய சந்ததிகளுக்கு நன்மையையும், தீமையையும் பகுத்துப் பார்க்கும்படி போதிக்கவேண்டிய கடமையிலிருந்து அவர்களது தலைவர்களும், பெற்றோர்களும் தவறிவிட்டார்கள். *எபிரெயர் 5:14.* கலகம் செய்த ஆயிரக்கணக்கான இஸ்ரவேலர்களை நீக்கிவிட்டு “வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாய்” இருக்க விருப்பம் கொண்டவர்களை தேவன் காப்பாற்றுவதை நாம் பார்க்கமுடிகிறது. *யாத்திராகமம் 32:28; லேவி. 10:1,2; எண்ணாகமம் 11:1-3,33,34; 14:29; 16:31-35; 25:1-9.* பலன்களையும், தண்டனைகளையும் உள்ளடக்கிய தேவனுடைய வாக்குத்தத்தங்களை லேவி. *26:1-46* வரை உள்ள வசனங்களில் தயவு கூர்ந்து கவனியுங்கள்.

தேவன் தெரிந்துகொண்ட இஸ்ரவேல் மக்கள் பற்றிய விவரங்களின் ஆரம்பப் பகுதியில் மிக முக்கியமானவற்றை மட்டுமே இந்தப் பாடத்தில் நாம் பார்த்து இருக்கின்றோம். தேவன் நமக்காக மேற்கொண்ட பிரதான நடவடிக்கையை புரிந்துகொள்வதற்காகவே இவைகளை நாம் பார்த்தோம். “வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளை” தமது பிள்ளைகளாக்கி நித்திய குடும்பத்தை உருவாக்கவேண்டுமென்ற அவருடைய நோக்கத்தை





நிறைவேற்றிக்கொள்ள முடியாமற்போகுமளவிற்கு “கர்த்தருடைய கை குறுகிப்போகவில்லை” என்பதை கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கவேண்டும்.

*ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம் சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார். ஆதலால், அவர் தேவ தூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார். எபிரெயர் 2:14-16.*

ஆபிரகாமின் சந்ததியாரை தமக்குரிய பெரிய தேசமாக மாற்றும்படிக்கு, அடிமைகள் என்ற நிலையிலிருந்து அவர்களை மீட்டு “வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள்” என்ற மேன்மையான நிலைமைக்கு அவர்களை கொண்டுவருவதற்கு தேவன் எப்படி உதவி செய்தார் என்பதை இந்தப் பாடத்தில் நாம் புரிந்துகொண்டோம். ஆபிரகாமின் சந்ததியார் இன்றளவிலும் அவருடைய உதவியை தொடர்ந்து பெறுவதற்கேற்ப, அவர்களை இயேசு கிறிஸ்துவிடம் கொண்டு வந்து சேர்ப்பதற்கென்று இந்த நீண்ட கால திட்டத்தை அவர் தீட்டினார். பவுல் பிலிப்பி பட்டணத்தில் இருந்த பரிசுத்தவான்களை நோக்கி: “மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்’’ என்று கூறினான். *பிலிப்பியர் 3:3.* கிறிஸ்தவர்களே “தேவனுடைய இஸ்ரவேலர்கள்.” *கலாத்தியர் 6:16.* “நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது.” ஏனெனில் “இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு’’ உட்படுத்தியிருக்கிறார். *பிலிப்பியர் 3:20; கொலோசெயர் 1:13.*

லேவிய ஆசாரியத்துவ காலத்தில் இஸ்ரவேல் தேசத்தைக் கட்டி எழுப்புவதற்கு தேவன் செய்த காரியங்களை பார்க்கும்படிக்கு ஒன்பதாம் பாடத்திலும் இதே சரித்திர அமைப்பு பயன்படுத்தப்பட உள்ளது.